**நாமக்கல், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர். திரு.பொ.அசோகன்,பி.எஸ்சி. (விவ)**

---

செ.மு.ஆணை எண்அ2/7199/2020 நாள் 20.01.2021.

பொருள் பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4-ல் அடங்கிய பணிகள் - 2018-19 மற்றும் 2019-2020ஆம் ஆண்டிற்கான போட்டித் தேர்வில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு பணிநியமனம் வழங்கியது - பணியில் சேர்ந்து கொண்டது - பணிவரன் முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை
1) சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செ.மு.ஆணைஎண்அநிபி5/22094/2020 நாள் 05.08.2020
2) இவ்வலுவலக செ.மு.ஆணை எண் அ2/7199/2020 நாள் 13.08.2020
3) சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண் அபபி3/95057/2019 நாள் 02.08.2019.

---

**ஆணை**

பார்வை (1)ல் காணும் செயல் முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4ல் அடங்கிய 2018-2019 மற்றும் 2019-2020ஆம் ஆண்டிற்கான போட்டித்தேர்வில் திருமதி.ஆ.சிந்துபாரதி அவர்கள் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை(2)ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, இவ்வலுவலக கட்டுப்பாட்டில் புதுச்சத்திரம், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக 20.08.2020 மு.ப பணியில் சேர்ந்து கொண்டார். பார்வை (3)ல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின்படி, திருமதி.ஆ.சிந்துபாரதி அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 20.08.2020 முற்பகல் முதல் பணிவரன்முறைபடுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV 2018-19 மற்றும் 2019-2020ஆம் ஆண்டு தேர்வில் நியமனம் சம்பந்தமாக சென்னை / மதுரை உயர்நீதி மன்ற நீதிபதி குழுவில் நிலுவையில் உள்ள (W.P's) மனு மீதான தீர்ப்புக்கு இப்பணிவரன் முறை உட்பட்டதாகும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தனியர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு கால தொடர்பணி காலத்திற்குள் இரண்டாண்டுகால தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும் எனவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

ஒம்/-பொ.அசோகன்,
வேளாண்மை இணை இயக்குநர்,
நாமக்கல்.

பெறுதல்
திருமதி.ஆ.சிந்துபாரதி,
இளநிலை உதவியாளர்(பிணையமற்றது)
புதுச்சத்திரம்.

வழி &
நகல் - வேளாண்மை உதவி இயக்குநர், புதுச்சத்திரம்.
நகல் - சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது (அபபி 3 பிரிவுக்கு)
நகல் - செயல்முறை ஆணை கோப்பிற்கு.

உபரி 2

//உத்தரவுபடி//

ஆட்சிஅலுவலர் (பொ)